# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF SUB COURT, USILAMPATTI
## SUB JUDGE
## S.C. No. 182/ 2025

Deposition of witness for PW1

Name : பாலச்சந்திரன்
Father Name :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.07.2026.

---

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை:

ஆஜர் எதிரி என் மனைவி. எந்த தேதி என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. புகார் நான் தான் கொடுத்தேன் . அதில் உள்ள கைரேகை என்னுடையது தான். என் மனைவி பெயரில் உள்ள கோவத்தின் காரணமாக புகார் அளித்தேன் அதில் உள்ள விவரம் தெரியாது. நான் கொடுத்த புகார் மனுவில் உள்ள கைரேகை மட்டும் அ.சா.ஆ.1. போலீஸ் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பில் பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கேட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டார்**

எனக்கும் எதிரிக்கும் 2009 ம் ஆண்டு திருமணம் நடந்து குழந்தைகள் உள்ளனர் . எங்களுக்கும் அடிக்கடி பிரச்சனை வரும் என்றும் கடந்த 08.06.2024 ல் சுமார் 11 மணி அளவில் குடித்துவிட்டு வீட்டிற்கு வந்தபோது எங்களுக்குள் வாய்தகராது ஏற்பட்டது என்றும் அருகில் இருந்தவர்கள் விலக்கிவிட்டதாலும் வழக்கம்போல் பிரச்சனை என்று தூாக்கசென்றுவிட்டதாலும் ஆனால் நான் தூங்கிக்கொண்டிருந்தபோது என் மனைவி எங்கள் வீட்டில் உள்ள மீன் வெட்டும் கத்தியை எடுத்து தேவிடியா மகனே

அவுசாரி மகனே என்று பேசி இத்தோடு செத்து தொலைடா என்று தலை வலதுபுறம் இடதுபுறம் மாறிமாறி வெட்டினார் என்றும் மீண்டும் எந்திருக்க முயற்சி செய்தபோதும் எனது கழுத்தை நோக்கி வெட்டும்போது நான் சிறிது விலக கன்னத்தில் வெட்டுக்காயம் விழுந்தது என்றும் நிலைத்தடுமாறி விழுந்தபோது தன் கையில் வைத்திருந்த கத்தியால் எனது இடது பக்கதோள்பட்டை இடதுபக்க மணிகட்டு வெட்டி பின்னர் தடுத்தபோது நடுவிரல் வலதுபக்க காது கழுத்து தலையில் மாறிமாறி வெட்டினார் என்றும் நான் சத்தம்போட்டபோது அருகில் இருந்தவர்கள் ஓடி வந்து காப்பாற்றினார்கள் என்றும் என் மனைவி அவர்களை கத்தியை காட்டி கொலைமிரட்டல் செய்தார் என்றும் காசிமாயன் மகன் ஆட்டோவில் ஏற்றி சிகிச்சைக்கு சேர்த்தார் என்றும் சிகிச்சையில் இருந்தபோது உத்தப்பநாயக்கனூர் சார்பு ஆய்வாளரிடம் புகார் அளிததாகவும் பின்னர் போலீஸ் விசாரித்தாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரி என் மனைவி என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்லை.

குறுக்கு விசாரணை இல்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.07.02 15:55:55 +0530

Assistant Sessions Judge,
Usilampatti.